Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 274 | உள்ளூர் - 02.10.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 274 | வெளியூர் - 03.10.2026 | சனிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

அக்டோபர் மாத ராசிபலன்கள்!
பேங்க் ஆஃப் இந்தியாவில் 205 பணியிடங்கள்!
கோவில் ஊழியர்களுக்கு புதிய சலுகைகள்!
சிஜேபி போராட்டம்: பலத்த பாதுகாப்பு!

## மகாத்மா காந்தியின் 157-வது பிறந்த நாள்: நினைவிடத்தில் தலைவர்கள் மரியாதை!

புதுடெல்லி, அக். 02–

டெல்லி ராஜ்காட்டில் உள்ள காந்தி நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அங்கு பிரதமர் நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, டெல்லி கவர்னர் தரன்ஜித் சிங், டெல்லி முதல் மந்திரி ரேகா குப்தா, மத்திய மந்திரி மனோகர் லால் கட்டார், மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் காந்தி நினைவிடத்தில் மலர்கள் தூவி, மரியாதை செலுத்தினர்.பின்னர், பிரார்த்தனை, பஜனைப் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



மகாத்மா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியதாவது: மகாத்மா காந்தியின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் சத்தியம், அகிம்சை, கருணை மற்றும் சேவை ஆகியவற்றின் ஒளிவிளக்காக திகழ்கிறது.

இது ஒவ்வொரு காலத்திலும் மனிதகுலத்திற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக தொடா்ந்து விளங்கும்.எல்லா உயிர்களிடமும் பகையற்றவராகவும், நட்புணர்வும் கருணையும் கொண்டவராகவும் இருப்பவர்; ‘எனது’ என்ற பற்றும் அகந்தையும் இல்லாதவர்; இன்பத்தையும் துன்பத்தை யும் சமமாகக் கருதுபவர்; பொறுமை கொண்டவர்.’’ என்று பதிவிட்டுள்ளார்.

## சிஜேபி போராட்டம்: பலத்த பாதுகாப்பு!

புதுடெல்லி, அக். 02–

சிஜேபி போராட்டம் எதிரொலியாக தில்லி மற்றும் மும்பை நகரங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.




வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்த நடவடிக்கைகளில் 2 தேர்தல் ஆணையர்கள் பலமுறை எதிர்ப்பு தெரிவித்தும், தலைமைத் தேர்தல் ஆணையர் சட்டவிரோதமான முறையில் தன்னிச்சையாகச் செயல்பட்டதாக வெளியான செய்திகள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

இதையடுத்து, ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டுமெனவும், அவர் மீது குற்றவிசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தி ஏராளமான எதிர்க்கட்சிகள் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் பதவியை ஞானேஷ் குமார் ராஜிநாமா செய்ய வேண்டுமென வலியுறுத்தி, கரப்பான்பூச்சி மக்கள் கட்சியினர் இன்று மாலை 4 மணிக்கு மும்பையில் உள்ள சிவாஜி பூங்காவில் போராட்டம் நடத்துவதாக அறிவித்துள்ளனர். மேலும், தில்லியில் ஜந்தர் – மந்தர் 2.0 உள்பட நாடு முழுவதும் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் சிஜேபி அறிவித்துள்ளது.

இதையடுத்து, தில்லி ஜந்தர் – மந்தரில் துணை ராணுவப் படையினர் குவிக்கப்பட்டு, தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஜன்பத், படேல் சௌக், மத்திய செயலகம், ராஜீவ் சௌக், புது தில்லி உள்பட 11 மெட்ரோ ரயில் நிலையங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக மறுஅறிவிப்பு வரும்வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மும்பை சிவாஜி பூங்கா நுழைவு வாயிலிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## மதுராந்தகத்தில் முதல்வர் விஜய் சாலைவலம்! மக்களை சந்திக்கும் 35 இடங்கள்!!

சென்னை, அக். 02–

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை இடைத்தேர்தலுக்கான பிரசாரம் இறுதி கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில், மதுராந்தகம் தவெக வேட்பாளர் மரகதம் குமாரவேலை ஆதரித்து முதல்வர் விஜய் சாலைவலம் மேற்கொள்ளவுள்ளார்.



மாண்டூரில் சாலைவலத்தை தொடங்கும் முதல்வர் விஜய், மதுராந்தகத்தில் நிறைவு செய்கிறார். இந்த சாலைவலத்தின் போது 35 சந்திப்புகளில் பிரசார வாகனத்திலிருந்தபடி, மக்களைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாமண்டூர்
புக்கத்துறை சந்திப்பு
படாளம் சந்திப்பு
ஜானகிபுரம் சந்திப்பு
மேலவலம்பேட்டை சந்திப்பு,
கருங்குழி சந்திப்பு,
கருங்குழி பேரூராட்சி அலுவலகம்,
மதுராந்தகம் வடக்கு புறவழிச்சாலை நுழைவு,
மதுராந்தகம் தெற்கு புறவழிச்சாலை,
அய்யனார் கோவில் சந்திப்பு,
மோச்சேரி,
தண்டலம்,
பெரும்பாக்கம்,
கிளியாநகர்,
செம்பூண்டி,
கீழாமூர்,
பசுவங்கரணை,
ராமாபுரம்,
மோகல்வாடி,
எலப்பாக்கம்,
பொற்பணங்கரணை,
அணைக்குன்றம்,
கீழ்அத்திவாக்கம்,
மின்னல் சித்தாமூர்,
பெரும்பேர்கண்டிகை,
கடமலைப்புத்தூர்,
தென்பாக்கம் சந்திப்பு,
சோத்துப்பாக்கம்,
மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவில் சந்திப்பு,
சரவம்பாக்கம்,
பெருவெளி,
முதுகரை,
வில்லவராயநல்லூர்,
மாம்பாக்கம்,
மதுராந்தகம்

இந்த சாலைவலத்தின்போது, கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர் – சிறுமியர், பள்ளி மாணவ – மாணவியர், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், உடல்நலம் குன்றியவர்கள் உள்ளிட்டவர்களுக்கு கண்டிப்பாக பங்கேற்கக் கூடாது என்று கட்சியின் பொதுச் செயலரும் அமைச்சருமான என். ஆனந்த் தெரிவித்துள்ளார்.

## பிறப்பு, இறப்பு பதிவுகளில் புதிய நடைமுறைகள் அமல்!

ஆவடி. அக். 02–

ஆவடி மாநகராட்சிக்கு உள்பட்ட பல்வேறு பகுதிகளில் பிறப்பு, இறப்பு பதிவுகளில் புதிய நடை முறைகள் வியாழக்கிழமை முதல் (அக்.1) அமலுக்கு வந்துள்ளது என மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா தெரிவித்துள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஆவடி மாநகராட்சிக்கு உள்பட்ட பல்வேறு பகுதிகளில் பிறப்பு, இறப்பு பதிவுத் தொடர்பான 2026–ன் திருத்தச்சட்டத்தின் அடிப்படையில், பிறப்பு, இறப்பு பதிவுகளுக்கான புதிய நடைமுறைகள் வியாழக்கிழமை முதல் (அக்.1) அமலுக்கு வந்தன. அதன்படி, ஆவடி மாநகராட்சி உள்பட்ட பல்வேறு பகுதிகளில் வசிப்ப வர்கள் பிறப்பு, இறப்பு நிகழ்ந்த நாளில் இருந்து, ஓராண்டுக்குள் வழக்கமான நடை முறையில் ஆவடி மாநகராட்சி அலுவலகத்தில் பதிவு செய்யலாம். ஓராண்டுக்கு மேல் 2 ஆண்டுகளுக்குள் தவறவிட்ட பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்ய மாவட்ட ஆட்சியர், துணை ஆட்சியர் அல்லது அங்கீகரி க்கப்பட்ட நிர்வாக மாஜிஸ்திரேட் உத்தரவை பெற வேண்டும். பிறப்பு, இறப்பு குறித்த உண்மைத்தன்மை சரி பார்க்க ப்படும். காலதாமதத்து க்கான நிர்ணயக் கட்டணம் செ லுத்த வேண்டும். 2 ஆண்டுகளுக்கு மேல் தவறவிட்ட பிறப்பு, இறப்பு களைப் பதிவு செய்ய முதல் வகுப்பு நீதித்துறை மாஜிஸ்திரேட் உத்தரவு கட்டாயமாகும்.

சம்மந்தப்பட்ட பிறப்பு, இறப்பு குறித்த உண்மைத்தன்மை சரி பார்க்கப்பட்ட பின்னரே பதிவு செய்ய ப்படும். இதற்கும் காலதாமத த்துக்கான நிர்ணயக் கட்டணம் செலுத்த வேண்டும் என்றார்.

## கட்டணம் இல்லை... பயணத்துக்கு எல்லை இல்லை!

# 12,692 அரசுப் பேருந்துகளில் ‘வெற்றிப் பயணம்’! மகளிர், கல்லூரி மாணவிகள், திருநங்கைகளுக்காக!

## செங்கல்பட்டு, திருப்பூரில் தேர்தல் விதிகள் நீங்கியதும் அமல்!!




சென்னை, அக். 02–

அரசு பஸ்களில் கட்டணமில்லா வெற்றிப்பயணம் விரிவாக்க திட்டத்தை சென்னை–காஞ்சிபுரம் பஸ்சில் முதல்வர் விஜய் துவக்கி வைத்தார்.

சென்னை கோயம்பேட்டில் மகாத்மா காந்தி உருவப்படத்திற்கு முதல்வர் விஜய் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பிறகு அரசு பஸ்களில் கட்டணமில்லா வெற்றிப்பயணம் விரிவாக்க திட்டத்தை முதல்வர் விஜய் துவக்கி வைத்தார். சென்னையில் இருந்து காஞ்சிபுரம் செல்லும் பஸ்சில் ஏறிய அவர், பெண் பயணிகளுக்கு கட்டணம் இல்லாத டிக்கெட் வழங்கி வாழ்த்துக்கூறினார்.

**என்ன பயன்?**

மாநகர, நகரப் பகுதிகளில் இயங்கும், எக்ஸ்பிரஸ், எல்.எஸ்.எஸ்., டீலக்ஸ், அரசு பஸ்கள், புறநகர் சாதாரண பஸ்கள் மற்றும் 40 கி.மீ.,க்கு மேற்பட்ட மலைப்பகுதி சாதாரண பஸ்கள் என, 12 ஆயிரத்து 692 பேருந்துகளில், இலவசமாக மகளிர் பயணம் செய்யலாம். வருமான உச்சவரம்போ, பயண எண்ணிக்கைக் கட்டுப்பாடோ இல்லை. தினமும் சுமார் 84.32 லட்சம் மகளிர் பயனடைவார்கள். ஆண்டுக்கு ரூ.6,000 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது இத்திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதும் தமிழக மகளிருக்கான எளிதில் அணுகக்கூடிய பொதுப் போக்குவரத்து வசதி பெருமளவில் கிடைக்கும். இடைத்தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக, செங்கல்பட்டு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் விதிமுறைகள் விலக்கப்பட்ட பிறகே திட்டம் செயல்படுத்தப்படும். ஏழு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இத்திட்டம் செயல்படும். மாவட்டங்களுக்கு இடையிலான பயணங்களுக்கும் குறிப்பிட்ட பேருந்துகளில் இந்தச் சலுகை பொருந்தும். பெண்களின் அன்றாடப் போக்குவரத்துச் செலவைக் குறைக்கும்.

## பெண்களுக்கு எந்தெந்த பேருந்துகளில் கட்டணமில்லை? முழு விவரம்!

சென்னை, அக். 02–

மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத்தின் விரிவாக்க திட்டத்தை முதல்வர் ச. ஜோசப் விஜய் தொடங்கிவைத்தார். கடந்த திமுக ஆட்சியில் மாநகர சாதாரண பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து சேவை திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.



இந்த நிலையில், புறநகர் அரசுப் பேருந்துகளிலும் மகளிர் கட்டணில்லா பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, ‘வெற்றிப் பயணம்’ என்ற பெயரில் மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்.2 முதல் செயல்படுத்தப்படும் என சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் முதல்வர் விஜய் அறிவித்திருந்தார்.

அதன்படி, இத்திட்டத்தை சென்னை கோயம்பேட்டில் இருந்து முதல்வர் விஜய் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

வெற்றிப் பயணம் திட்டம் மூலம் முதல் கட்டமாக, மாநகரம், நகரங்களில் சாதாரணப் பேருந்துகள் மட்டுமன்றி எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ், தாழ்தள அரசுப் பேருந்துகளிலும், இனி மகளிர் இலவசமாகப் பயணிக்கலாம். இத்திட்டத்தின் கீழ், மாநகர குளிர்சாதன பேருந்துகளில் பயணிக்க முடியாது.

கூடுதலாக, மாவட்டங்களுக்கு இடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில், சாதாரண கட்டணப் பேருந்துகளிலும் மகளிர் கட்டணமின்றி பயணிக்கலாம்.

இதற்கு வருமான உச்சவரம்போ, பயண எண்ணிக்கை கட்டுப்பாடுகளோ இல்லை. திருநங்கைகளும் இலவசமாகப் பயணிக்கலாம்.

## காந்தியடிகள் பிறந்தநாள், காமராஜர் நினைவு நாள்: முதல்வர் விஜய் புகழாரம்!!

சென்னை, அக். 02–

அகிம்சை என்னும் பேராயுதத்தால் உலகையே வியக்க வைத்தவர் மகாத்மா காந்தி என்று அவரது பிறந்த நாளில், முதல்வர் விஜய் தன்னுடைய சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.



’’அகிம்சை என்னும் பேராயுதத்தால் உலகையே வியக்க வைத்து, இந்தியத் திருநாட்டிற்கு விடுதலையைப் பெற்றுத்தந்த மாபெரும் தலைவர், நமது தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளில் அவரது தேசப்பற்றையும். தியாக வாழ்வையும் போற்றி வணங்குகிறேன்.

எளிமை, நேர்மை, மனிதநேயம், சமத்துவம், சமூக நல்லிணக்கம் ஆகியவற்றைத் தனது வாழ்வின் நெறிகளாகக் கொண்டு, உலகம் முழுமைக்கும் அன்பையும், சகோதரத்துவத்தையும் பரப்பிய மாமனிதராகத் திகழ்ந்தவர்.

மகாத்மா காந்தியடிகளின் கனவுகளை நனவாக்கி, அமைதியும், நல்லிணக்கமும், சகோதரத்துவமும் தழைத்திடும் சமூகத்தை உருவாக்கி, நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாத்து, அவர் காட்டிய அறவழியில் நமது வெற்றிப் பயணத்தைத் தொடர்வோம்!’’ என்று குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தலைவர் காமராஜரின் நினைவு நாளையொட்டி முதல்வர் விஜய் தனது எக்ஸ் பக்கத்தில்,

“எளிமையான வாழ்க்கையாலும், நேர்மையான நிர்வாகத்தாலும் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் சென்ற பெருந்தலைவர் காமராஜர் நினைவு நாளில், அவருக்கு எனது புகழ் வணக்கங்கள்!

கிராமந்தோறும் பள்ளிகளைத் திறந்து, மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி கல்விப்புரட்சிக்கு வித்திட்டதோடு, எண்ணற்ற பொதுத்துறை நிறுவனங்கள், அணைகள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கி, தொழில் முன்னேற்றத்திற்கும், வேளாண் வளர்ச்சிக்கும் வித்திட்டவர் பெருந்தலைவர் காமராஜர்.

தன்னலமற்ற பொதுச் சேவைக்காகத் தனது வாழ்வையே அர்ப்பணித்த கர்மவீரரின் ஒப்பற்ற தியாகத்தைப் போற்றி அவர் காட்டிய நல்வழியில் தொடர்ந்து பயணிப்போம்!’’ என்று பதிவிட்டுள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 02.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 15-ம் தேதி

# புற்றுநோய்: தாமதம் தவிர்ப்போம்!



தமிழகத்தில் புற்றுநோய் தடுப்பையும் ஆரம்பநிலைக் கண்டறிதலையும் வலுப்படுத்த வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது. கல்வியறிவு பெற்றவர்கள்கூட நோய் முற்றிய பிறகு மருத்துவமனையை அணுகுவது கவலைக்குரியது. அச்சம், தயக்கம், விழிப்புணர்வின்மை ஆகியவை மருத்துவ உதவியைத் தாமதப்படுத்துகின்றன.

கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுக் கணிப்பின்படி, தமிழகத்தில் புதிய புற்றுநோய் பாதிப்புகள் 2030ஆம் ஆண்டில் ஏறக்குறைய ஒரு லட்சத்தை நெருங்கக்கூடும். இவை பழைய தரவுகளின் அடிப்படையிலான மதிப்பீடுகள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்களைப் பரிசோதனைக்கு அழைப்பதுடன் அரசின் கடமை முடிந்துவிடாது. அருகாமையில் மருத்துவ வசதி, விரைவான பரிசோதனை முடிவுகள், உரிய சிகிச்சை, பொருளாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றையும் உறுதிசெய்ய வேண்டும். கிராமப்புறங்களிலும் நகர்ப்புற ஏழை மக்களிடையிலும் மருத்துவச் சேவைகள் தடையின்றிச் சென்றடைய வேண்டும்.

பரிசோதனையில் சந்தேகத்துக்குரிய பாதிப்பு கண்டறியப்பட்டவர்களைத் தொடர்ந்து கண்காணித்து, அடுத்தகட்ட மருத்துவ மதிப்பீட்டுக்கு அழைத்துச் செல்லும் நடைமுறை அவசியம். மருத்துவமனைகளில் பணியாளர் பற்றாக்குறையையும் காத்திருப்பு நேரத்தையும் குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தாமல், நம்பிக்கையையும் சரியான தகவல்களையும் வழங்க வேண்டும். நோயாளிகளையும் குடும்பத்தினரையும் குறைகூறுவதற்குப் பதிலாக, அவர்கள் எதிர்கொள்ளும் தடைகளை அகற்றுவதே பொறுப்பான அணுகுமுறை.

மாவட்ட அளவிலான தரவுகளை வெளியிட்டு, பரிசோதனை முதல் சிகிச்சை வரையிலான தாமதத்தை அரசு மதிப்பிட வேண்டும். மருத்துவர்களின் ஆலோசனைக்கேற்ற பரிசோதனைகளை அணுகுவதற்கான வழிகாட்டுதலும் மக்களுக்கு எளிய தமிழில் கிடைக்க வேண்டும்.

புற்றுநோய்க்கு எதிரான வெற்றி, அறிவிப்புகளில் இல்லை; தாமதமின்றி சிகிச்சை பெறும் ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும் இருக்கிறது.

**ஆசிரியர்**
**மதுரைமணி**

# கோவில் ஊழியர்களுக்கு புதிய சலுகைகள்!



சென்னை, அக். 02–

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் கோவில்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்கு இணையான இந்தச் சலுகையை வழங்க, இந்து சமய நிறுவனங்களின் பணியாளர் விதிகள் 2020–ல் தமிழக அரசு திருத்தம் செய்துள்ளது. இதனால், பெண் பணியாளர்கள் குழந்தைப் பராமரிப்புக்கும் உடல்நலத்திற்கும் போதிய நேரம் ஒதுக்க முடியும். மேலும், ஓய்வுபெறும் கோவில் ஊழியர்கள் தங்களிடம் உள்ள ஈட்டிய விடுப்பில் அதிகபட்சம் 240 நாட்களை ஒப்படைத்து, அதற்கான பணப்பலனைப் பெறலாம். இந்த இரு அறிவிப்புகளும் கோவில் பணியாளர்களின் குடும்ப நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ளன. பெண் ஊழியர்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் இந்த நடவடிக்கை, பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது. மகப்பேறு காலத்தில் பெண்களுக்கு ஆதரவாகவும், ஓய்வுக்குப் பிறகு ஊழியர்களுக்கு பொருளாதார உதவியாகவும் இச்சலுகைகள் அமையும். இதற்கான புதிய விதித் திருத்தங்களை தமிழக அரசு தற்போது நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது.

# மீனாட்சி கோயிலில் நவராத்திரி விழா: அக்டோபர் 11-ல் தொடக்கம்!



மதுரை, அக். 02–

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நவராத்திரி விழா அக்டோபர் 11 முதல் 20 வரை நடைபெறுகிறது.

விழா நாட்களில் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 8.30 மணி வரை அம்மன் மூலஸ்தானச் சன்னதியில் திரையிட்டு அபிஷேகம், அலங்காரம் செய்யப்படும். அப்போது தேங்காய் உடைத்தல், அர்ச்சனைகள் மூலஸ்தான அம்மனுக்கு நடத்தப்பட மாட்டாது. கொலு மண்டபத்தில் உள்ள அலங்கார அம்மனுக்குத்தான் நடத்தப்படும். அக்டோபர் 25–ல் சாந்தி அபிஷேகம் நடைபெறும்.

விழா நாட்களில் அம்மனுக்கு வைரக்கிரீடம், தங்கக்கவசம் சாத்துதல், உபயத் திருக்கல்யாணம் மற்றும் தங்கரத உலா இருக்காது.

கோயில் திருக்கல்யாண மண்டபத்தில் தினமும் சொற்பொழிவு, பரதநாட்டியம், பக்தி இன்னிசை, வீணை இசைக் கச்சேரி நடைபெறும். கொலு அலங்கார பொம்மைகள் உபயமாக வழங்குபவர்கள், சிவப்பெருமானின் 64 திருவிளையாடல்கள் சம்பந்தமான மற்றும் இதர பொம்மைகளை வழங்குபவர்கள் கோயிலின் உள்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கலாம்.

நவராத்திரி அலங்காரம்

அக்டோபர் 11–ல் ராஜராஜேஸ்வரி அலங்காரம், 12–ல் அர்த்தநாரீஸ்வரர், 13–ல் கோலாட்டம், 14–ல் பட்டாபிஷேக அலங்காரம், 15–ல் தபசு, 16–ல் ஊஞ்சல், 17–ல் முத்தங்கி சேவை, 18–ல் மஹிஷாசுரமர்த்தினி, 19–ல் சிவபூஜை அலங்காரங்களில் அம்மன் எழுந்தருளுவார்.

# பி.எஃப். வரம்பு உயர்வு; காப்பீடு ரூ.7 லட்சமே!



புதுடெல்லி, அக். 02–

பி.எஃப். கட்டாய உறுப்பினர் சேர்க்கைக்கான மாத ஊதிய உச்ச வரம்பு ரூ.15,000–லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த மாற்றம் செப்டம்பர் 17, 2026 முதல் அமலுக்கு வந்துள்ளது. ரூ.25,000 ஊதியத்தின் அடிப்படையில் 12 சதவீதப் பங்களிப்பு கணக்கிடப்படும் ஊழியர்களுக்கு, மாதாந்திர பி.எஃப். பிடித்தம் ரூ.3,000 ஆகும். அனைவருக்கும் ஒரே அளவு பிடித்தம் இருக்காது; கணக்கீட்டுக்கு உட்படும் ஊதியத்தைப் பொறுத்து மாறும். எனினும், பி.எஃப். உறுப்பினர்களுக்கான இ.டி.எல்.ஐ. ஆயுள் காப்பீட்டின் அதிகபட்சத் தொகை தற்போது ரூ.7 லட்சமாகவே தொடர்கிறது. ஊதிய வரம்பு உயர்ந்ததால் காப்பீடு தானாக ரூ.10.5 லட்சமாக உயராது. இந்தக் காப்பீட்டுக்கு ஊழியர்கள் தனியாகப் பிரீமியம் செலுத்த வேண்டியதில்லை. பணியில் இருக்கும்போது உறுப்பினர் உயிரிழந்தால், திட்ட விதிகளின்படி நியமனதாரர் அல்லது சட்டப்பூர்வ வாரிசுக்குத் தொகை வழங்கப்படும்.

# அக். 10-ல் இந்தியா-பாகிஸ்தான் மோதல்!



சென்னை, அக். 02–

2027 ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அக்டோபர் 2 முதல் நவம்பர் 21 வரை நடைபெறவுள்ளதாக வெளியான செய்தி தெரிவிக்கிறது.

இந்தியா தனது முதல் போட்டியில் அக்டோபர் 7–ல் ஆஸ்திரேலியாவையும், 10–ல் ஜோகன்னஸ்பர்க்கில் பாகிஸ்தானையும் எதிர்கொள்கிறது. தொடர்ந்து 14–ல் ஆப்கானிஸ்தான், 17–ல் தகுதிச்சுற்று அணி, 24–ல் ஜிம்பாப்வே அணிகளுடன் விளையாடுகிறது. அரையிறுதிப் போட்டிகள் நவம்பர் 17, 18 தேதிகளிலும், இறுதிப்போட்டி நவம்பர் 21–ல் ஜோகன்னஸ்பர்க்கிலும் நடைபெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# EB-5 விண்ணப்பக் கட்டணம் 114% உயர்வு?



புதுடெல்லி, அக். 02–

அமெரிக்காவில் முதலீடு மூலம் கிரீன் கார்டு பெற உதவும் EB–5 திட்டத்தின் விண்ணப்பக் கட்ட ணங்கள், நவம்பர் 30, 2026 முதல் உயர்த்தப்படவுள்ளதாக செய்தி தெரிவிக்கிறது. பிராந்திய மையங்கள் வழியாக முதலீடு செய்வோருக்கான விண்ணப்பக் கட்டணம் 3,675 டாலரிலிருந்து 7,850 டாலராகவும், கூடுதல் இன்டிகிரெட்டி நிதிக் கட்டணம் 1,000 டாலரிலிருந்து 1,100 டாலராகவும் உயரவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இதன்படி மொத்தம் 8,950 டாலர் செலுத்த வேண்டியிருக்கும்.

நேரடியாக முதலீடு செய்வோருக்கான விண்ணப்பக் கட்டணம் 7,615 டாலராக உயரவுள்ளதாகவும் செய்தி குறிப்பிடுகிறது. இந்த மாற்றம், முதலீடு மூலம் அமெ ரிக்காவில் குடியேறத் திட்டமிடு வோரின் செலவை அதிகரிக்கும்.

# டோரதி திரைப்படத்தை கேக் வெட்டி கொண்டாடிய திருப்பூர் திருநங்கைகள்!




திருப்பூர், அக். 02–

கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில், இசைஞானி இளையராஜா இசையில்,ஜோதி சுரேஷ் பாண்டே தயாரிப்பில் டோரதி என்ற திரைப்படம் தமிழகம் முழுவதும் 500 க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் இன்று வெளியாகியுள்ளது. இந்த திரைப்படத்தில் நடிகர் சசிகாந்த், சனந்த். நடிகை கீர்த்தி சுரேஷ் ஆகியோர் நடித்துள்ளனர். இந்தப் படத்தில் திருநங்கைகளைப் பற்றி வெகு சிறப்பாக இயக்குநர் சுப்புராஜ் இயக்கி வெளி கொண்டுவந்துள்ளார்மேலும் திருநங்கைகளை கடவுளுக்கு நிகராக இசைஞானி இளையராஜா இசையமைத்து பாடல்கள் வெளிவந்துள்ளது. இந்நிலையில் திருப்பூரில் ஸ்ரீ சக்தி திரையரங்கில் திரையிடப்பட்டுள்ள டோரதி திரைப்படத்தை கொண்டாடும் வகையில் திருப்பூர் மாவட்ட திருநங்கைகளின் தலைவி திவ்யா தலைமையில் திரையரங்கு முன்பு நூற்றுக்கும் மேற்பட்ட திருநங்கைகள் ஒன்று சேர்ந்து கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தனர். மேலும் இந்த திரைப்படத்தை அனைவரும் பார்க்க வேண்டும் என்றும் இந்தத் திரைப்படம் திருநங்கைகளுக்கு ஒரு சிம்ம சொப்பனமாக அமைந்துள்ளது என்றும் கூறினர். தொடர்ந்து திருநங்கைகள் ஒன்று சேர்ந்து டோரதி திரைப்படத்தை கண்டு மகிழ்ந்தனர்.

# பழனியில் 200 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு!



பழனி, அக். 02–

பழனியில் 200 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு இதில் கே.ரவிமனோகரன் எம்எல்ஏ பங்கேற்றார். திண்டுக்கல் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ், 200 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பூங்கோதை தலைமை தாங்கினார். வட்டார மருத்துவ அலுவலர் வருண் முன்னிலை வகித்தார். இதில் பழனி தொகுதி கே ரவி மனோகரன் எம் எல் ஏ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, 200 கர்ப்பிணி பெண்களுக்கு வளையல் அணிவித்து சீர்வரிசை பொருள்களை வழக்கினார். பின்பு கர்ப்பிணி பெண்களுக்கு ஐந்து வகை கலவை ச்சாதம் விருந்து பரிமாறப்பட்டது. இதில் அதிமுக மாவட்ட இளைஞர் அணி தலைவர் அன்வர்தீன் உள்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர்



# அக்டோபர் மாத ராசிபலன்கள்!



அக்டோபர் மாதத்தில் கிரகங்களின் வக்ர நிலை மற்றும் சேர்க்கைகளால் பன்னிரண்டு ராசிகளுக்கும் வெவ்வேறு பலன்கள் ஏற்படலாம் என ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. துலாம் ராசியில் சுக்கிரன், புதன் சேர்க்கையும், பின்னர் சூரியன் இணைவதும் முக்கியத்துவம் பெறுகின்றன.

**மேஷம்:** வேலையில் முன்னேற்றமும் நிதி ஆதாயமும் கிடைக்கலாம். உடல்நலம், குடும்ப உறவுகளில் கவனம் தேவை. தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**ரிஷபம்:** முதலீடுகள் சாதகமான பலன்களைத் தரலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணிச்சிக்கல்களைப் பேச்சுத்திறனால் சமாளிக்கலாம். ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**மிதுனம்:** தொழிலில் வளர்ச்சி ஏற்படும். புதிய திட்டங்கள் கைகூடும். குடும்ப விஷயங்களில் அலட்சியம் வேண்டாம். செலவுகளைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

**கடகம்:** திட்டமிட்ட பணிகள் முன்னேற்றம் தரும். குடும்பத்துடன் இனிமையான நேரம் செலவிடலாம். மாத இறுதியில் நல்ல செய்தி வரலாம்.

**சிம்மம்:** முதலீடுகள் லாபம் தரலாம். உறவுகள் வலுப்பெறும். முக்கிய தொழில் முடிவுகளில் நிதானமும், தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்ப்பதும் அவசியம்.

**கன்னி:** பணிகளில் வெற்றி கிடைக்கலாம். வேலைப்பளு, உடல்நலம் மற்றும் முதலீடுகளில் கவனம் தேவை. மாத இறுதியில் சூழல் சீராகலாம்.

**துலாம்:** ஆக்கப்பூர்வமான முயற்சிகள் வெற்றி தரும். குடும்ப ஆதரவு மனநிம்மதி அளிக்கும். கூட்டாண்மை முதலீடுகளால் செலவுகள் அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்:** பணியிடத்தில் மதிப்பு உயரும். நிதிநிலை படிப்படியாக மேம்படும். பயணங்கள் இனிமையான அனுபவங்களைத் தரலாம். குடும்பத்தில் நடைமுறை அணுகுமுறை தேவை.

**தனுசு:** தொழில் வளர்ச்சியும் குடும்ப நல்லிணக்கமும் இருக்கும். பயணங்களில் வாய்ப்புகள் கிடைக்கலாம். காதல் உறவுகளில் பொறுமையும் செலவுகளில் கட்டுப்பாடும் தேவை.

**மகரம்:** பயணங்கள் சாதகமாக அமையலாம். பணிச்சிக்கல்களைப் பேச்சுவார்த்தையால் தீர்க்கலாம். நிதி முன்னேற்றத்திற்கு முயற்சியும், உணர்வுகளில் கட்டுப்பாடும் அவசியம்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் முன்னேற்றம் தரும். குடும்பத்தில் இணக்கம் நிலவும். முதலீடுகளில் கவனம் தேவை. பயணங்களை ஒத்திவைக்கலாம்.

**மீனம்:** தொடர்ச்சியான முயற்சிகள் பலனளிக்கும். உடல்நலம் மேம்படலாம். செலவுகள் அதிகரிக்கக்கூடும். மாத இறுதியில் அமைதி கிடைக்கலாம்.

பொதுவாக, இந்த மாதம் பணிகள், குடும்ப உறவுகள், செலவுகள் ஆகியவற்றில் நிதானமான அணுகுமுறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ராசிக்கும் வாய்ப்புகளுடன் கவனிக்க வேண்டிய அம்சங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

# பரமக்குடியில் பணியில் உயிரிழந்த தலைமை காவலருக்கு முதல்மைச்சர் நிவாரண நிதி!



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு மருத்துவமனையில் பணியின் போது உயிரிழந்த தலைமைக் காவலர் கண்ணகி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்கும் விதமாக, தமிழக முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் ரூ.30 லட்சம் நிவாரணத் தொகை வழங்க உத்தரவிட்டுள்ளார்.அதனைத் தொடர்ந்து, இன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் , தலைமைக் காவலர் கண்ணகி குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்ததுடன், தமிழக அரசின் சார்பில் ரூ.30 லட்சத்திற்கான நிவாரணக் காசோலையை வழங்கினார்.



# சினிமா துளிகள்..!

## சென்னையில் சிக்மா படத்தை காணும் சங்கீதா, திவ்யா விஜய்!



இயக்குநர் ஜேசன் சஞ்சய்யின் சிக்மா படத்தை காண அவரது தாயார் சங்கீதா மற்றும் சகோதரி திவ்யா விஜய் ஆகியோர் திரையரங்கிற்கு வந்துள்ளனர்.

லைகா தயாரிப்பில் இயக்குநராக அறிமுகமாகும் முதல்வர் விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய்யின் சிக்மா படத்தில் சந்தீப் கிஷன் நாயகனாகவும் ஃபரியா அப்துல்லா நாயகியாக நடித்துள்ளார்.

இந்தப் படம் தமிழ்நாடு முழுவதும் இன்று காலை 9.30 மணியளவில் திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

தமிழ்நாடு முதல்வர் விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகும் முதல் திரைப்படம் என்பதால், மிகப்பெரிய எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

இந்த நிலையில், சென்னை வடபழனியில் உள்ள கமலா திரையரங்கில் ஒளிபரப்பாகி வரும் சிக்மா திரைப்படத்தின் முதல் காட்சியை ஜேசன் சஞ்சய்யின் தாய் சங்கீதாவும், சகோதரி திவ்யா விஜய்யும் பார்த்து வருகின்றனர்.

முதல்வர் விஜய் இன்று காலை மகளிர் இலவச பேருந்து பயணத் திட்டத்தை தொடக்கி வைத்துவிட்டு, மதுராந்தகம் தேர்தல் பிரசாரத்துக்கு புறப்படவுள்ளதால், அவர் சிக்மா படத்தை எப்போது பார்ப்பார் என்ற தகவல் வெளியாகவில்லை.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# ஆரோக்கிய உணவும் வயிற்றை உப்பச் செய்யுமா? அளவுதான் முக்கியம்!



ஓட்ஸ், சாலட், முளைகட்டிய தானியங்கள் சத்தானவை. இருப்பினும், இவற்றைச் சாப்பிட்ட பிறகு சிலருக்கு வயிறு உப்புசமும் வாயுத்தொல்லையும் ஏற்படலாம். நார்ச்சத்து நிறைந்த உணவுகளைத் திடீரென அதிகமாக எடுத்துக்கொள்வது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். குடலில் நார்ச்சத்து நொதிக்கும்போது உருவாகும் வாயுக்கள் அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றன.

அதற்காக இந்த உணவுகளை முற்றிலும் தவிர்க்க வேண்டியதில்லை. சிறிய அளவில் தொடங்கி, படிப்படியாக அதிகரிப்பதும் போதுமான தண்ணீர் குடிப்பதும் உதவலாம். பச்சைக் காய்கறிகளுக்குப் பதிலாக லேசாக வேகவைத்தவற்றை முயற்சிக்கலாம். முளைகட்டிய தானியங்களை நன்றாகச் சமைத்து உண்பது உணவுப் பாதுகாப்புக்கு முக்கியம். மெதுவாகச் சாப்பிடுவது, நன்றாக மென்று விழுங்குவது, ஒரே நேரத்தில் அதிகமாக உண்ணாமல் இருப்பதும் செரிமானத்திற்கு உதவலாம்.

உப்புசம் தொடர்ந்து நீடித்தாலோ, கடுமையான வயிற்றுவலி, வாந்தி, மலத்தில் ரத்தம் அல்லது காரணமின்றி எடை குறைதல் இருந்தாலோ மருத்துவரை அணுக வேண்டும். ஆரோக்கிய உணவிலும் உடலுக்கு ஏற்ற அளவும் சமச்சீரான உணவுப் பழக்கமும் முக்கியம்.

# வடகிழக்குப் பருவமழை: வடதமிழகத்தில் இயல்பைவிட அதிக மழைப்பொழிவு?



சென்னை, அக். 02–

எதிர்வரும் வடகிழக்குப் பருவமழை (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) காலத்தில் வடதமிழகத்தில் இயல்பைவிட அதிக மழைப்பொழிவு இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

2026 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) காலத்திற்கான முன்னறிவிப்பு:

2026 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை), தென் தீபகற்ப இந்தியாவைச் சேர்ந்த 5 வானிலை துணைப்பிரிவுகளான தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால், கடலோர ஆந்திரப் பிரதேசம் மற்றும் யானம், ராயலசீமா, கேரளம் மற்றும் மாஹே, தெற்கு உள்கர்நாடகம் ஆகிய பகுதிகளில் பருவகால மழைப்பொழிவு இயல்பாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நீண்டகால சராசரியின் (LPA) 88–112% அளவில் இருக்கும்.

இந்தப் பருவத்தில், கேரளத்தின் தெற்குப் பகுதிகள் மற்றும் தமிழ்நாட்டில் இயல்பானது முதல் இயல்பைவிட அதிகமான மழைப்பொழிவு கிடைக்க வாய்ப்புள்ளது. மீதமுள்ள பெரும்பாலான பகுதிகளில் இயல்பைவிட குறைவான மழைப்பொழிவு கிடைக்க வாய்ப்புள்ளது.

அக்டோபர் 2026–ல், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களின் பல பகுதிகள், வட தமிழ்நாட்டின் சில பகுதிகள் மற்றும் கேரளத்தின் மலைப்பகுதிகளில் இயல்பானது முதல் இயல்பைவிட அதிகமான மழைப்பொழிவு கிடைக்க வாய்ப்புள்ளது. இப்பகுதியின் மீதமுள்ள பெரும்பாலான இடங்களில் இயல்பைவிட குறைவான மழைப்பொழிவு கிடைக்க வாய்ப்புள்ளது.

2026 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், தென் தீபகற்ப இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைகள் இயல்பைவிட அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது.

தற்போது பூமத்திய ரேகையை ஒட்டிய பசிபிக் பெருங்கடல் பகுதியில் வலுவான எல்–நினோ நிலை நிலவி வருகிறது. குறிப்பாக மத்திய–கிழக்கு மற்றும் கிழக்கு பசிபிக் பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை சராசரியைவிட கணிசமாக அதிகமாக உள்ளது. கடல்–வளிமண்டல இணைந்த அமைப்பும் வலுவான எல்–நினோ நிலைக்கு ஒத்த தன்மையை வெளிப்படுத்துகிறது.

பருவமழை இயக்கம் தொடர்பான ஒருங்கிணைந்த முன்னறிவிப்பு அமைப்பு ( MMCFS) மற்றும் பிற முக்கிய உலகளாவிய காலநிலை மாதிரிகளின் முன்னறிவிப்புகளின்படி, எல்–நினோ நிலை ஆண்டு இறுதி வரை மேலும் வலுப்பெற்று, அடுத்த ஆண்டின் தொடக்கத்திலும் தொடர வாய்ப்புள்ளது.

தற்போது இந்தியப் பெருங்கடலில் நடுநிலை இந்தியப் பெருங்கடல் இருமுனை நிலை (Indian Ocean Dipole – 10D) நிலவி வருகிறது. சமீபத்திய MMCFS முன்னறிவிப்பின்படி, வடகிழக்குப் பருவமழைக் காலத்திலும் நடுநிலை IOD நிலை தொடர வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு
## பேங்க் ஆஃப் இந்தியாவில் 205 பணியிடங்கள்!



பேங்க் ஆஃப் இந்தியா வங்கியில் பல்வேறு பிரிவுகளில் ஸ்கேல் IV வரை மொத்தம் 205 அதிகாரி பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்கான பணியிடம் மும்பை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பு எண் 2026–27/02, நாள் 01.08.2026. ஆன்லைன் விண்ணப்பப் பதிவு செப்டம்பர் 10, 2026 அன்று தொடங்கியது. விண்ணப்பிக்கக் கடைசி நாள் அக்டோபர் 5, 2026 ஆகும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் கல்வித்தகுதி, வயது வரம்பு, தேர்வு முறை மற்றும் விண்ணப்பக் கட்டணம் உள்ளிட்ட விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் படித்து அறிந்துகொள்ளலாம். தகுதியுள்ளவர்கள் bankofindia.bank.in என்ற இணையதளம் வழியாக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

# செங்கல்பட்டு, திருப்பூரில் 'வெற்றிப் பயணம்' திட்டம் தற்காலிகமாக நிறுத்தம்!



சென்னை, அக். 02–

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த தொகுதிகளை உள்ளடக்கிய செங்கல்பட்டு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. இதன் காரணமாக, இந்த 2 மாவட்ட ங்களில் புதிதாக விரிவுபடுத்தப்பட இருந்த 'வெற்றிப் பயணம்' திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு ள்ளது. தமிழகத்தில் பொதுமக்கள் நகரப் பேருந்துகளில் எளிதாகவும், குறைந்த செலவிலும் பயணம் செய்யும் வகையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள கட்டணமில்லா பயண வசதி தொ டர்ந்து செயல்படும் என தெரிவிக்கப்பட்டு ள்ளது. அதன்படி, செங்கல்பட்டு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள நகரப் பேருந்துகளுக்கான கட்டணமில்லா பயணத்தில் எந்த மாற்றமும் இருக்காது. அந்த வசதி வழக்கம்போல் தொடர்ந்து வழங்கப்படும்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தலையொட்டி அமல்படுத்தப்பட்டுள்ள தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கப்பட்ட பின்னர், செங்கல்பட்டு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்ட 'வெற்றிப் பயணம்' திட்டம் செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக திட்டத்தின் விரிவாக்கம் மட்டும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள நகரப் பேருந்துகளுக்கான கட்டணமில்லா பயணம் தொடர்ந்து வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

# அ.இ. பார்வர்ட் பிளாக் சார்பில் ஆலோசனை கூட்டம்!



அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் திருப்பூர் நிர்வாகிகள் கூட்டம் மற்றும் உறுப்பினர் சேர்க்கை படிவம் வழங்குதல் நிகழ்ச்சி மேலும் வருகின்ற அக்டோபர் 30 தேவர் ஜெயந்திக்கு செல்வது குறித்து ஆலோசனை கூட்டம் மாவட்ட பொதுச்செயலாளர் தோழர் தேளி_கே.காளிமுத்து தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மத்திய குழு உறுப்பினர் ராஜசேகர். மாவட்ட தலைவர் நெல்லை ஊதாமோதரன். மற்றும் மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் திரளானோர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் இடைத் தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ரோடு ஷோ மேற்கொண்டு வருகிறார். சாலையின் இருபுறமும் திரண்டுள்ள பொதுமக்கள் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளித்து வருகின்றனர்.

# ஸ்ரீரங்கம் கோவிலின் ரூ.50 கோடி நிலம் ஆக்கிரமிப்பு வழக்கு; தி.மு.க. நிர்வாகி அதிரடி கைது!



திருச்சி, அக். 02–

திருச்சி ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலுக்கு சொந்தமான ரூ.50 கோடி மதிப்பிலான நிலம் ஸ்ரீரங்கம் அரசு ஆஸ்பத்திரி அருகே உள்ளது. இந்த நிலத்தை திருச்சி மாநகராட்சி மண்டல தலைவரான ஆண்டாளின் கணவரும், ஸ்ரீரங்கம் தி.மு.க. பகுதி செயலாளருமான ராம்குமார் போலி ஆவணங்கள் தயாரித்து தனது பெயருக்கு கிரையம் செய்து, அங்கு தி.மு.க. அலுவலகம் நடத்தி வருவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுகுறித்து ஸ்ரீரங்கம் கோவில் இணை ஆணையர் சிவராம்குமார் மாநகர குற்றப்பிரிவு போலீசில் புகார் செய்தார்.

அதன்பேரில், கோவில் நிலங்களை அபகரித்ததாக தி.மு.க. பகுதிச்செயலாளர் ராம்குமார் மற்றும் பத்மஜா, விஜயா, சவுந்தரராஜன், வெங்கடவரதன் மற்றும் அப்போதைய ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் வனிதா ஆகியோர் மீது 6 பிரிவுகளின் கீழ் மாநகர குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சண்முகவேல் வழக்குப்பதிவு செய்தார். மேலும், அவர்களை பிடிக்க உதவி ஆணையர் பரத்சீனிவாசன் தலைமை யில் 2 சிறப்பு தனிப்படைகள் அமைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து ராம்குமார், சார்பதிவாளர் வனிதா ஆகியோர் முன்ஜாமீன் கேட்டு மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த முன்ஜாமீன் மனுக்கள் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டன. இதற்கிடையே முன்ஜாமீன் மனு மீதான விசாரணைக்காக தி.மு.க. நிர்வாகி ராம்குமார் நேற்று காலை மதுரைக்கு காரில் புறப்பட்டு சென்றார். திருச்சி பஞ்சப்பூர் பஸ் நிலையம் அருகே அவரது கார் மற்றும் செருப்புகள் கிடந்த நிலையில், அவரை சிலர் கடத்தி சென்றதாக அவரது மனைவி ஆண்டாள் உள்ளிட்ட உறவி னர்கள் குற்றம்சாட்டினர். இந்நிலையில் பஞ்சப்பூர் அருகே ராம்குமாரின் காரை வழிமறித்து அவரை போலீசார் கைது செய்தது தெரியவந்தது. அவரை போலீஸ் நிலையத்துக்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர்.

இதைத்தொடர்ந்து திருச்சி அரசு மருத்துவமனையில் அவருக்கு மருத்துவ பரி சோதனை செய்த பின்னர், நேற்று மாலை திருச்சி ஜே.எம்.1 மாஜிஸ்திரேட்டு அனுஸ்ருதி முன்னிலையில் ராம்குமாரை போலீசார் ஆஜர்படுத்தினர். ராம்குமாரி டம் விசாரணை நடத்திய பின்னர், அவரை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் வைக்க மாஜிஸ்திரேட்டு உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து பலத்த பாதுகாப்புடன் ராம்குமாரை அழைத்துச்சென்று திருச்சி மத்திய சிறையில் போலீசார் அடைத்தனர்.

# ராமநாதபுரம் மாவட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள் ஆய்வு!



ராமநாதபுரம், அக். 02–

ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி சாயல்குடி, சிக்கல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள உணவகங்கள் மற்றும் உணவு நிறுவனங்களில் உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள் முத்துச்சாமி மற்றும் வெண்ணிலா ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் சுமார் 32 உணவகங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அப்போது தடை செய்யப்பட்ட சுமார் 15 கிலோ எடையுள்ள பிளாஸ்டிக் கேரி பைகள் மற்றும் உணவுப் பார்சல்களுக்கு பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்யப்பட்டன. விதிமுறைகளை மீறிய 16 கடைகளுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டதுடன், 9 கடைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும், உணவுப் பொருட்களின் தரத்தை பரிசோதிக்கும் வகையில் உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வகப் பகுப்பாய்வுக்கு அனுப்பப் பட்டுள்ளன.

ஆய்வின்போது செயற்கை வண்ணங்கள் கலந்த சிக்கன் 65 உள்ளிட்ட சுமார் 4.5 கிலோ எடையுள்ள பாதுகாப்பற்ற உணவுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

# தங்கம் விலை உயர்வு!



சென்னை, அக். 02–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று(அக். 2) சவரனுக்கு ரூ. 760 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 1,10,200–க்கும் கிராமுக்கு ரூ. 95 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 13,775–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ. 5 உயர்ந்து, ஒரு கிராம் ரூ. 245–க்கும் ஒரு கிலோ (கட்டி வெள்ளி) வெள்ளி ரூ. 5,000 உயர்ந்து, ரூ. 2.45 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# ஆசிய விளையாட்டு! இந்திய வில்வித்தை அணிக்கு தங்கம்!




புதுடெல்லி, அக். 02–

ஆசிய விளையாட்டு ரிகர்வ் வில்வித்தைப் போட்டியில் இந்திய மகளிர் அணி தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டியின் 20–ஆவது தொடர் ஜப்பானின் அய்ச்சி – நாகோயாவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இந்தியா, சீனா உள்பட 45 நாடுகளைச் சேர்ந்த 11,000–க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். 14–வது நாளான இன்று ரிகர்வ் வில்வித்தை மகளிர் பிரிவில் இறுதிப் போட்டியில் தென் கொரியாவை எதிர்கொண்ட இந்திய அணி தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது. இந்திய அணியின் அங்கிதா பகத், கீர்த்தி, அனில் மொஹோட் ஆகிய வீராங்கனைகள் 4 – 2 என்ற புள்ளிக் கணக்கில் போட்டியை வென்றனர்.

இதன்மூலம், ரிகர்வ் வில்வித்தைப் போட்டியில் இந்திய மகளிர் அணி முதல்முறையாக தங்கம் வென்று சாதனைப் படைத்துள்ள்ளது. அக். 2 காலை நிலவரப்படி, புள்ளிப்பட்டியலில் 12 தங்கங்களுடன் இந்திய அணி 5–வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

# நகைக்கடன் வாங்குவதில் முதல் இடத்தில் தமிழ்நாடு!




சென்னை, அக். 02–

அங்கத்தை அலங்கரிக்கும் தங்கம் விலைமதிப்பற்ற பொக்கிஷமாக கருதப்படுகிறது. குறை இருந்தாலும் நிறை செய்யும் என்பதால் எந்த மங்களகரமான நிகழ்ச்சி என்றாலும் பேசுபொருளாக இருப்பது இந்த மஞ்சள் உலோகம் தான். இது எல்லாவற்றையும்விட ஆத்திர அவசரத்துக்கு கடன் வாங்குவதற்கும் தங்கம்தான் கைகொடுக்கிறது. இதுபோன்ற பல காரணங்களால் தங்கத்தின் விலை எவ்வளவு எகிறினாலும், அதன் விற்பனை மட்டும் குறையவே இல்லை. இப்போதெல்லாம் குடும்பங்களில், அதிலும் குறிப்பாக விவசாயிகள், குறு, சிறு, நடுத்தர தொழில்களை நடத்துபவர்கள், சில்லறை வியாபாரிகள் அவசிய தேவைக்கு வங்கிகளிலும், தனியாரிடமும் தங்க நகைக்கடன் வாங்குகிறார்கள். விவசாயிகளைப் பொருத்தமட்டில் விதைப்பு காலத்தில் இருந்து அறுவடை வரை ஒவ்வொரு பணிக்கும் நகைக்கடன்தான் வாங்குகிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு தங்கத்தை ஈடாக வைத்து வங்கிகளிலும், தனியாரிடமும் கடன் வாங்குவது என்பது மிக எளிது. மற்ற கடன்களை வாங்குவதற்கு பல நடைமுறைகள் உண்டு. ஆனால் நகைக்கடன் வாங்க நகைகளை கொடுத்தவுடன், அதை மதிப்பீடு செய்துவிட்டு உடனடியாக கையில் கடன் கேட்கும் தொகையை ரொக்கமாக வழங்கிவிடுவார்கள். அறுவடை முடிந்து கையில் பணம் கிடைத்தவுடன் கொண்டுபோய் கடன் தொகையை கொடுத்தபிறகு, சில நிமிடங்களில் நகையை திரும்பப் பெற்றுக்கொள்ளமுடியும். சில கிராமங்களில் பெண்களிடம் உங்கள் நகை எங்கே என்று கேட்டால், பள்ளிக்கூடத்துக்கு போயிருக்கிறது. அடுத்த வாரம் அல்லது அடுத்த மாதம் வந்துவிடும் என்று வேடிக்கையாக சொல்லுவார்கள். குறு, சிறு, நடுத்தர தொழில்களை நடத்துபவர்கள் பெரிய ஆர்டர் கிடைக்கும்போது நிறைய மூலப்பொருட்கள் வாங்குவதற்கு உள்பட பல்வேறு தேவைகளுக்காக ஆபத்பாந்தவனாக நகைக்கடன்தான் உதவியாக இருக்கின்றன.

சில்லறை வியாபாரிகளுக்கு கூடுதலாக சரக்கு வாங்க பணம் தேவைப்பட்டால், கடன் வாங்குவதைவிட நகைக்கடன்தான் மிகவும் வசதி என்ற வகையில் அதையே வாங்கிவிட்டு, வியாபாரம் லாபகரமாக இயங்கியதும் நகையை திருப்பி விடுகிறார்கள். ஆக, விவசாய பணிகளை மேற்கொள்ளவும், தொழில் வளர்ச்சிக்கும், வியாபார பெருக்கத்துக்கும் அதிகம் துணை நிற்பது தங்க நகைக்கடன்தான். எனவேதான் கையில் பணம் இருக்கும்போது மற்ற சேமிப்புகளை விட தங்கத்தில் முதலீடு செய்வதை பெரும்பாலான குடும்பத்தினர் விரும்புகிறார்கள். பெண்களுக்கும் தங்களுக்கு கிடைக்கும் கூடுதல் ஆபரணம் என்று ஒரு வகையிலும், அவசர செலவுக்கு கணவனுக்கு, பிள்ளைகளுக்கு கொடுப்பதில் உறவு வலுவடைகிறது என்ற வகையிலும் தங்கம் மீது அவர்களுக்கு அதிக மோகம் ஏற்படுகிறது. மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில்தான் அதிக நகைக்கடன் வழங்கப்படுகிறது. நகைக்கடன் வாங்கும் மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு முதல் இடத்திலும், ஆந்திரா இரண்டாம் இடத்திலும் இருக்கிறது. கடந்த மார்ச் மாத நிலவரப்படி பொதுத்துறை வங்கிகள் வழங்கிய தங்க நகைக்கடன்களைப் பொறுத்தமட்டில், தமிழ்நாட்டில் வங்கிகள் வழங்கி நிலுவையில் உள்ள கடன் அளவு ரூ.4 லட்சத்து 11 ஆயிரத்து 656 கோடியாகும். 2–வது இடத்தில் இருக்கும் ஆந்திராவைவிட தமிழ்நாட்டில் பொதுத்துறை வங்கிகளில் 85 சதவீதம் அளவுக்கு அதிகமாக நகைக்கடன் வாங்கியிருக்கிறார்கள். ஆந்திராவில் வாங்கப்பட்ட நகைக்கடன் அளவு ரூ.2 லட்சத்து 22 ஆயிரத்து 953 கோடிதான். ஆக, தமிழக பெண்களுக்கு நகை என்பது தங்களை அலங்கரிக்கும் ஆபரணம் என்பதோடு. குடும்பத்தினரின் அவசர தேவைகளுக்காக கடன் வாங்குவதற்கு உதவிக்கரமாகவும் திகழ்கிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881






## இன்றைய கார்ட்டூன்

### தவெகவை நெருங்கும் பாமக
### இடைத்தேர்தலுக்குப் பின் கூட்டணிக் கணக்குகள் மாறுமா?




## பிளை துபாய் விமான சம்பவத்திற்கு பின்னணியில் ஈரான்? டிரம்ப் பரபரப்பு தகவல்!

வாஷிங்டன், அக். 02–



துபாயில் இருந்து நேற்று முன்தினம் காலை புறப்பட்ட பிளைதுபாய் எப்.இசட் 1073 என்ற விமானம் அடுத்த 2½ மணி நேரத்தில் திடீரென்று 14 ஆயிரம் அடிக்கும் கீழே செங்குத்தாக இறங்கியது. இதனால் பயணிகள் பதற்றமடைந்து கூச்சலிட்டனர். உடனடியாக அந்த விமானத்தில் இருந்து ஸ்குவாக் 7700 மற்றும் 7500 ஆகிய அவசரகால சிக்னல்கள் அனுப்பப்பட்டது. மேலும், இஸ்ரேல் விமான நிலையத்திற்கு அவசரகால தகவல் அனுப்பப்பட்டதும் அந்நாட்டின் ராணுவம் உடனடியாக தனது போர் விமானங்களை வானில் பறக்கவிட்டது.

உள்ளே என்ன நடக்கிறது? என்பது தெரியாத நிலையில் விமானம் சவுதி அரேபியாவில் தரையிறக்கப்பட்டது. .விமானத்தில்இந்திய கேப்டன் ஸ்மித் மச்சாரை , துணை விமானி கத்தியால் தாக்கியதுடன், விமானத்தை கட்டுப்படுத்த முயன்றது தெரியவந்தது. இந்த சம்பவத்தில் ஈரானுக்கு தொடர்பு இருக்கிறதா? என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்பிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த டிரம்ப், "இதுகுறித்து தற்போது விசாரித்து வருகிறோம். நான் கேள்விப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பார்த்தால், பதில் ஆம் என்றே கூறுவேன். ஆனால், விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது" என்று தெரிவித்தார்.

மேலும், இந்த தாக்குதலுக்கு ஈரான் காரணமாக இருந்தது உறுதி செய்யப்பட்டால், ஈரான் மீது "மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று டிரம்ப் எச்சரித்தார்.

எனினும், இதுவரை ஈரானின் தொடர்பை உறுதிப்படுத்தும் அதிகாரப்பூர்வ ஆதாரம் எதுவும் வெளியாகவில்லை. இதற்கிடையே, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, துணை விமானிக்கு ஈரானுடன் தொடர்பு உள்ளதா என்பதை தற்போதைய நிலையில் உறுதியாக கூற முடியாது என்றும், விசாரணை முடிந்த பிறகே இதுகுறித்து தெளிவாக தெரியவரும் என்றும் தெரிவித்துள்ளார்

## தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் தி.மு.க.விற்கு தகுந்த பாடம் புகட்டுவார்கள்- அமைச்சர் ரமேஷ்!

திருச்சி, அக். 02–



திருச்சியில் பேட்டியளித்த அமைச்சர் ரமேஷ், தி.மு.க.வினர் நாகரிகமாக பேச கற்றுக்கொள்ள வேண்டும் எனவும், தமிழகம் முழுவதும் மக்கள் தி.மு.க.விற்கு தகுந்த பாடம் புகட்டுவார்கள் எனவும் தெரிவித்தார். மேலும், நில மோசடி வழக்கில் அனைத்து சட்ட நடவடிக்கைகளும் தொடரும் என உறுதியளித்தார்.

திருச்சியில் இன்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

இடைத்தேர்தலில் பணம் கொடுத்து வாக்கு சேகரிக்க வேண்டிய அவசியமோ, நிலையோ த.வெ.க.விற்கு இல்லை.

தி.மு.க.வினர் பொதுவெளியில் நாகரிகமாக பேச கற்றுக்கொள்ள வேண்டும். பேறிஞர் அண்ணா சொல்லி கொடுத்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கைகளை அவர்கள் பின்பற்ற வேண்டும். இல்லையென்றால், கொளத்தூர் தொகுதியில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு அந்த தொகுதி மக்கள் பாடம் புகட்டியது போல, தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் தி.மு.க.விற்கு தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலுக்கு சொந்தமான சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை ஆக்கிரமித்து, போலி ஆவணங்கள் மூலம் நில அபகரிப்பு செய்த புகாரில், தி.மு.க. பகுதி செயலாளர் ராம்குமார் போலீசாரால் பஞ்சப்பூர் பகுதியில் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார்.

"நிலத்தை விலைக்கு வாங்கிய தி.மு.க. நிர்வாகி ராம்குமார் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த நிலத்தை அவருக்கு முறைகேடாக விற்பனை செய்த புதுச்சேரியை சேர்ந்த ஓய்வு பெற்ற நீதிபதியும் கைது செய்யப்படுவாரா? என்ற கேள்விக்கு, இந்த நில மோசடி வழக்கில் சட்டப்படி படிப்படியாக அனைத்து நடவடிக்கைகளும் தொடரும், என்றார்.

"இந்திய தேர்தல் ஆணையர் உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி 'இந்தியா' கூட்டணியினர் தொடர் போராட்டங்களை அறிவித்துள்ளனர். இப்போராட்டத்தில் த.வெ.க. பங்கேற்குமா?" என்ற கேள்விக்கு, இதுகுறித்து த.வெ.க. தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் முறைப்படி அறிவிப்பார்" என பதில் அளித்தார்.

## எஸ்ஐஆர்! நீக்கப்பட்ட வாக்காளர்களை சேர்க்க... சிறப்பு முகாம்கள்- தேர்தல் ஆணையம்!

புதுடெல்லி, அக். 02–



நாடு முழுவதும் தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டு ஏராளமான வாக்காளர்கள் எழுத்துப் பிழை போன்ற சிறியத காரணங்களுக்காக வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.

எஸ்ஐஆர் நடைமுறை குறித்து பேச்சு தொடங்கிய போதே, திமுக உள்ளிட்ட ஏராளமான கட்சிகள் அதனை எதிர்த்து வந்த நிலையில், தேர்தல் ஆணையர்களே அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தன்னிச்சையாக எஸ்ஐஆர் நடைமுறையை தொடங்கியது அண்மையில் ஆங்கில ஊடகம் வெளியிட்ட தகவல் மூலம் வெளியானது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிலையிலும், தகுதியான வாக்காளர்கள் பலர் வாக்காளர் பட்டியலிருந்து நீக்கப்பட்டதைக் கண்டித்தும் எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனங்களை முன் வைத்திருக்கும் நிலையில், தேர்தல் ஆணையம், மாநில தலைமைத் தேர்தல் அலுவலர்களுடனான இணையவழி சந்திப்பின்போது, எஸ்ஐஆர் நடந்து முடிந்த மாநிலங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தி, வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களின் பெயர்களை சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாய்மொழியாக அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எஸ்ஐஆர் பணியின்போது நீக்கப்பட்டவர்களையும், புதிதாக சேர்க்க வேண்டியவர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்குமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

முந்தைய வாக்காளர் பட்டியலுடன் ஒப்பிட்டு, விடுபட்டவர்களின் பெயர்களை மீண்டும் சேர்க்க நடவடிக்கை எடுக்கவும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்காக வீடு வீடாகச் சென்று வாக்காளர்களின் விவரங்களை அறியவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## 100 சதவீதம் எத்தனாலில் இயங்கும் கார்கள் இரண்டு மாதங்களில் சந்தைக்கு வரும்: நிதின் கட்காரி!

புதுடெல்லி, அக்.02–



இந்தியாவில் 100 சதவீத எத்தனால் இயங்கும் 'ஃப்ளெக்ஸ்–பியூல்' கார்களின் பயன்பாட்டை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அடுத்த 1 முதல் 2 மாதங்களில் மகிந்திரா, டொயோட்டா, சுசுகி மற்றும் ஹூண்டாய் நிறுவனங்கள் ப்ளெக்ஸ்–பியூல் என்ஜின் கொண்ட கார்களை அறிமுகம் செய்ய உள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை மந்திரி நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

## திருத்தணி மலை மீது 8 நாட்கள் ஆட்டோக்களுக்கு தடை!

திருத்தணி, அக். 02–



மலைக் கோயில் நுழைவு வாயில் பகுதியில் இருந்து படாசெட்டிகுளம் வரை பக்தர்கள் கட்டணமின்றி கோவில் பஸ்களில் பயணம் செய்யலாம். இதர பஸ்கள் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் கட்டணமின்றி வாகன நிறுத்தம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்ப ட்டு இருப்பதாக கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தணி முருகன் கோவிலுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசனம் செய்து செல்கிறார்கள். பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு உள்ள நிலையில் தற்போது தொடர் அரசு விடுமுறை நாட்கள் என்பதால் திருத்தணி கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலை மோதுகிறது.

இதைத்தெடார்ந்து பக்தர்கள் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு, இன்று (2–ந்தேதி), வருகிற 4–ந்தேதி, 11–ந்தேதி, 18–ந்தேதி, 19–ந்தேதி (ஆயுதபூஜை), 20–ந்தேதி (விஜயதசமி), 25–ந்தேதி மற்றும் 27–ந் தேதி ஆகிய 8 நாட்கள் மலைக்கோவிலுக்கு ஆட்டோக்கள் செல்ல கோவில் நிர்வாகம் தடை விதித்து உள்ளது.

மேலும், மலைக்கோவில் பகுதியில் உள்ள இட வசதிக்கு ஏற்ப கார்கள், இரு சக்கர வாகனங்கள் அனுமதிக்கப்படும் எனவும் மலைக் கோயில் நுழைவு வாயில் பகுதியில் இருந்து படாசெட்டி குளம் வரை பக்தர்கள் கட்டணமின்றி கோவில் பஸ்களில் பயணம் செய்யலாம்.

இதர பஸ்கள் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் கட்டணமின்றி வாகன நிறுத்தம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாக கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னிந்திய அட்டைப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம்!



தென்னிந்திய அட்டைப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கரூர், சேலம், நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த அட்டைப்பெட்டி உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.,

அட்டைப்பெட்டி உற்பத்திக்கு தேவையான முக்கிய மூலப் பொருட்கள் காகிதத்தின் விலை கடந்த இரண்டு மாதங்களில் மட்டும்,அட்டைப்பெட்டி உற்பத்திக்கு தேவையான மற்ற மூலப்–பொருட்களின் விலையும், 8 முறை உயர்ந்து, டன்னுக்கு ரூ8000 உயர்ந்துள்ளது . மேலும், தொழிலாளர்களின் சம்பளம், மின்கட்டணம் உள்ளிட்ட உற்பத்தி செலவுகளும் உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு அக்டோபர் 1ம்தேதி தேதி முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

அட்டைப்பெட்டிகளுக்கு டெலிவரி கட்டணம் தனியாக வசூலிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மூலப்பொருட்களின் தொடர் விலை உயர்வை கருத்தில் கொண்டு, அதை பொதுமக்கள் மற்றும் உபயோகிப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில், வரும் அக்டோபர் 9, 10 ஆகிய இரண்டு நாட்கள், அட்டைப்பெட்டி தயாரிக்கும் நிறுவனங்கள் உற்பத்தியை நிறுத்துவது என்றுமுடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த 2 நாட்கள் கரூர் ,கோவை நாமக்கல், சேலம் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் 400 மேற்பட்ட தொழிற்சாலைகள் இயங்காது .

மேலும் அட்டைப்பெட்டி உற்பத்தி மூலப்பொருட்கள் விலை உயர்வால் அக்டோபர் 1ம் தேதி முதல் 25 சதவீத விலை உயர்வு அமுல்படுத்தப்பட்டுள்ளது .

இதனை கரூரில் உள்ள டெக்ஸ்டைல் ஏற்றுமதி நிறுவனத்தை சாரந்தவர்களும் மற்றும் இதர அட்டைப்பெட்டி கொள்முதல் செய்யும் வாடிக்கையாளர்களும், ஏற்றுக்கொண்டு ஆதரவு அளிக்க வேண்டும் இவ்வாறு மண் டல் தலைவர் தண்டபாணி தெரிவித்துள்ளார்.

## மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கும்பாபிஷேக மண்டல பூஜை நிறைவு!




மதுரை, அக். 02–



மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் செப்டம்பர் 17ம் தேதி நடந்த நிலையில், இன்றுடன் மண்டல பூஜை நிறைவு பெறுகிறது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில், 17 ஆண்டுகளுக்கு பின், மகா கும்பாபிஷேகம் செப்., 17ம் தேதி கோலாகலமாக நடந்தது. இதில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர். கும்பாபிஷேகத்திற்கு பிறகு 48 நாட்களுக்கு(நவ.,3 வரை) மண்டல பூஜை நடக்கும்.

ஆனால் மீனாட்சி அம்மன் கோயிலில் செப்.,18ம் தேதி துவங்கி இன்று அக்.,2 வரை நடக்கிறது. மாதந்தோறும் திருவிழா இருப்பதால் மாத திருவிழாவை கணக்கிட்டு மண்டல பூஜை நடத்தப்படுவது இக்கோயில் வழக்கம். அதன்படி வரும் 11ம் தேதி நவராத்திரி உற்சவம் துவங்குவதை முன்னிட்டு இன்று மண்டல பூஜை நிறைவு பெறுகிறது. இன்றைய நிறைவு விழாவில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

**அலைமோதிய கூட்டம்:**

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கும்பாபிஷேகம் முடிந்து 16–ஆம் நாளான இன்று (02.10.2026), சுவாமி தரிசனத்திற்காக ஏராளமான பக்தர்கள் திரண்டனர். கூட்டத்திற்கேற்ப போதிய வசதிகள், நிழற்குடை, குடிநீர் போன்ற போதிய வசதிகள் இல்லாததால் பக்தர்கள் சிரமப்பட்டதாகக் கூறப்படுகிறது. பெண்கள், முதியவர்கள் , குழந்தைகளுடன் வந்தவர்கள் உள்ளிட்ட பக்தர்கள் தடுப்புக் கம்பிகளுக்கிடையே வரிசையில் காத்திருந்தனர். மேலும் தரிசனம் செய்வதில் சில சிரமங்கள் இருந்ததாக கூறினர்.

மேலும்சிலர் பணம்பெற்றுக்கொண்டு பக்தர்களை சுவாமி தரிசனத்திற்கு அழைத்துச் செல்வதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020